# சங்கரானந்தம்-24

## 10.06.2025






காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்


தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்

104, அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.

99404 47 437



அத்வைத குருவின் அதிகாலை விஸ்வரூப தரிஸனம்



நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும், வணங்கி உற்சவ மூர்த்திகளாக நம் கண் முன்னே உலவி அருள் பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி பெரியவாளையும் மனதார வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹா ஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹா ஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.**

திருமதி. தனுஜா சங்கர் S.கைலாஷ்

## மஹாஸ்வாமிகளின் பேரருளால் ஜெயந்தி மற்றும் ஆராதனை நாளில் இதுவரை வெளிவந்துள்ள பாடல் தொகுப்புகள்

★ சங்கரானந்தம் - 01 வெளியான நாள் : 29.12.2013

★ சங்கரானந்தம் - 23 வெளியான நாள் : 27.12.2024

**சங்கரானந்த கானங்களை**

**www.soundcloud.com / madambakkamshanks**

மற்றும்

**www.soundcloud.com/lakshmikanthan-shankar**

ஆகிய வலைதளங்களில் கேட்டு மகிழலாம்

விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தைக் கொண்ட இப்புத்தகங்கள் மஹா ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இலவசமாக தொடர்ந்து வழங்கிட தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி குருவருள் பெறுவீர்.

குறைந்தபட்சம் ரூ.100/- அளிப்பவர்களுக்கு இப்புத்தகம் தபாலில் அனுப்பிவைக்கப்படும். தங்கள் பகுதியில் ஆன்மிக நிகழ்ச்சிகளின்பொழுது, தங்கள் இல்லத்தின் திருமணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற விசேஷங்கள் நடைபெறும் பொழுது இப்புத்தகங்களை அச்சு விலையில் பெற்று பக்தர்களுக்கு வழங்கி மகிழ விருப்பம் உள்ளவர்கள் அணுகவும்:


## தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.

## ✆ 99404 47 437

**(8.00 - 10.00 pm. only)**


சங்கரானந்த கானங்கள் வருடந்தோறும் மஹா பெரியவாளின் ஜெயந்தி மற்றும் ஆராதனையின்போது மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு குரு அருட் பிரசாதமாக கிடைப்பதற்கு பல வகையிலும் அன்புள்ளத்தோடு பேராதரவு நல்கி வரும் அனைத்து நல் இதயங்களையும் வணங்கி மகிழ்கிறேன். அவர் தம் குடும்பத்தினர் அனைத்து வளங்களையும் நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ மஹா பெரியவாளின் பொற்பாதங்களை பணிகிறேன்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

## சிந்தித்தவர் துயர் தீர்க்கும் சங்கர குரு மஹாபெரியவா கானம்

**(முதாகராத்த மோதகம் - மெட்டு)**



நமசிவாய நாதனே மனதை வெல்லும் மாயனே
சாம வேத ப்ரியனே சாந்த ரூப சித்தனே
நாமம் கோடி கொண்டவா நால் வேதம் தந்தவா
காமகோடி ஆண்டவா காஞ்சி மஹா பெரியவா

சோம நாத சங்கரா சௌந்தர்ய ஈஸ்வரா - அர்த்த
ஜாம பூஜை ஏற்பவா தில்லை நடனேஸ்வரா
க்ஷேம லாபம் அருள்பவா சர்வ ரோகம் தீர்ப்பவா
காமகோடி ஆண்டவா காஞ்சி மஹா பெரியவா



காம தஹன சங்கரா நீல கண்ட ஈஸ்வரா
கோமளமாய் அமர்ந்தவா ஆலடியின் சங்கரா
வாம பாகம் தந்தவா வளங்கள் யாவும் அருள்பவா
காமகோடி ஆண்டவா காஞ்சி மஹா பெரியவா

ஊமத்தம்பூ ப்ரியனே உலகமெங்கும் அருள்பவனே
தாமரைப் பூ முகத்தனே தென் திசை நாதனே
காம குரோதம் தீர்ப்பவா கலங்கி நின்றோர்க் கருள்பவா
காமகோடி ஆண்டவா காஞ்சி மஹா பெரியவா

## அம்மையப்பபனாய் அமர்ந்தருளும்
## அனுஷநாத குரு கானம்

**(நான் பெற்ற செல்வம் - மெட்டு)**

குரு வார நாதனே
குறை களைந் தருள்வோனே
திருப்பாதம் பணிந்தோம் குரு காஞ்சி முனியே
- திருப்பாதம் பணிந்தோம்



அம்மையாய் அப்பனாய் அருள் குருவே
இம்மையில் உம்மையே பணிந்திடவே
வெம்மையின் வேரறுத்து அருள்வீரே
சம்புவே நம்பியே பணிந்தோமே

வெண்காளை வாகன வேதியனே
கண்களால் கவர்ந்தருள் ஜோதியனே
எண்ணம் அறிந்தருளும் யதி ராஜனே
அண்ணா மலையே அடிபணிந் தோமே

செஞ்சுடர் நெற்றியே கொண்டவனே
சஞ்சலம் தீர்த்திடும் சங்கரனே
அஞ்ஞான இருள் போக்கும் ஆதவனே
பஞ்சாக்ஷரனே பதம் பணிந் தோமே



அனுஷத்தில் பணிந்திட
அனுக்கிரஹம் புரிந்தருளும்
அனுஷ நாத சங்கர குரு கானம்

## அண்டி வந்தோர்க்கு அபயம் அருளும்
## அனுஷநாத குரு கானம்

**(பாக்கியாத லக்ஷ்மி பாரம்மா - மெட்டு)**

பாக்கியம் தான் பெற்றோம் சங்கரா
பிருந்தாவன தரிசன
பாக்கியம் தான் பெற்றோம் சங்கரா

அனுஷத்தில் உதித்திட்ட ஆதி சிவமே
அனுக்கிரஹம் புரிந்திடும் ஆலடி தவமே
அனுபந்தம் துறந்திட்ட ஆறு முகமே
அனுஷானுக்ரஹ ஆதி சங்கரரே

அதிஷ்டானம் கொண்டருள் ஆதி சிவமே
அதிகாலை ஒளியே ஆலடி தவமே
அதிரூப சுந்தர ஆறு முகமே
அதிஉன்னத குரு ஆதி சங்கரரே



அண்டத்தை காத்திடும் ஆதி சிவமே
அண்டி வந்தோர்க்கருள் ஆலடி தவமே
அண்டத்தை வலம் வந்த ஆறு முகமே
அண்டமே பிண்டம் என்றுரைத்திட்ட சங்கரரே

## திருக்காஞ்சியில் அமர்ந்தருளும் திருக்கயிலை நாதன் அனுஷநாத குரு கானம்

**(தெலிசிதே மோட்சமு - மெட்டு)**

திருக்கயிலை வாஸனே திருக்காஞ்சி நேஸனே
திருக்காட்சி தந்தருளும் திருக்காஞ்சி ஈஸனே
திருமடமே கொண்டருளும் திருக்காஞ்சி சங்கரனே

அனுஷ நாத சங்கரா ஆதி குரு சங்கரா
அஞ்ஞானம் போக்க வந்த ஆலடி சங்கரா
அக்னி நேத்ர புத்திரனே ஸ்வாமி நாத சங்கரா
அத்வைத பீட சங்கரா ஸ்ரீ சந்திர சேகரா

அம்மையப்பன் ஆனவா அன்புடனே அருள்பவா
அம்பு விழிப் பார்வையால் ஆட்கொண்டருள் சங்கரா
அம்பலத்து ஈஸனாய் ஆடல் பல புரிபவா
அத்வைத பீட சங்கரா ஸ்ரீ சந்திர சேகரா

அருவுருவாய் அருள்பவா அனாதிகால சங்கரா
அருந்தவமே கொண்டவா காலகால சங்கரா
அல்லல் தீர்த் தருள்பவா அருள்ஜோதி சங்கரா
அத்வைத பீட சங்கரா ஸ்ரீ சந்திர சேகரா



## திருக்காஞ்சியில் அமர்ந்தருளும் தீவினை தீர்த்தருளும் அனுஷநாத குரு கானம்

**(எளியோரை தாழ்த்தி / விழி கிடைக்குமா - மெட்டு)**

திருவாதிரை நாதனே திருக்கார்த்திகை நாதனே
திருப்பாதம் பணிந்தோர்க்கருள் ஸ்வாமி நாதனே-காஞ்சி
திரு மடத்தில் அமர்ந்தருளும் ஸ்வாமி நாதனே

திருக்கயிலை நாதனே திருவேரக நாதனே
திருக்காட்சி தந்தருளும் ஸ்வாமி நாதனே - காஞ்சி
திருத்தலத்தில் அமர்ந்தருளும் ஸ்வாமி நாதனே

திருச்சூரின் நாதனே திருக்காலடி வாஸனே
திருகோலம் கொண்டருளும் ஸ்வாமி நாதனே - காஞ்சி
திருத்தலத்தில் வரம் அருளும் ஸ்வாமி நாதனே

திருவாரூர் விடங்கனே திரு அண்ணாமலையனே
திரு நீல கண்டனே ஸ்வாமி நாதனே - காஞ்சியில்
திருக்காட்சி தந்தருளும் ஸ்வாமி நாதனே



## அருள் மழை பொழிந்திடும்
## அனுஷநாத குரு கானம்

**(சம்போ சங்கர சாம்ப சதாசிவ - பக்த மார்க்கண்டேயா)**

அருள் மழை பொழிந்திடும் அற்புத குருவே
அனுஷத்தின் திருவே சங்கரா
அறம் பொருள் இன்பம் அருளிய திருவே
அனாத ரட்சக சங்கரா

ஆனந்த தாண்டவ ஆதிரை திருவே
ஆலால சுந்தர சங்கரா
ஆதுரம் தீர்த்தே ஆறுதல் அருளும்
ஆலடி நாதனே சங்கரா

அம்புலி அணிந்திட்ட அம்பல வாணனே
அம்பிகை நாதனே சங்கரா
அன்பெனும் விழியால் அதர்மத்தை அழித்தே
அகிலத்தை காத்திடும் சங்கரா

ஆறிரு விழியால் அருள் ஷண்முகனே
ஆறாத் துயர் தீர்த் தருள் திருவே
ஆதங்கம் தீர்த்தே ஆனந்தம் அருளும்
ஆபத் பாந்தவ சங்கரா



## ஜெகம் காக்கும் ஜெகன்நாதன்
## அனுஷநாத குரு கானம்

**(ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெயஜெயராம் - மெட்டு)**



ஸ்ரீ குரு நாதா பத சரணம்
சிவ குரு நாதா பத சரணம்
குரு காஞ்சி நாதா பத சரணம்
ஜெகத் குரு நாதா பத சரணம்

அரு உரு சிவமே பத சரணம்
அல்லல்கள் தீர்த்தருள் பத சரணம்
ஆதி சங்கர பத சரணம்
ஆதிரை நாதா பத சரணம்

கயிலையின் திருவே பத சரணம்
கழல் பணிந்தோர்க் கருள் குரு சரணம்
கார்த்திகை திருவே பத சரணம்
காலமெல்லாம் அருள் பத சரணம்



சம்போ சங்கர பத சரணம்
சந்திர மௌலீஸ்வர பத சரணம்
சாம்ப சதாசிவ பத சரணம்
சாந்த சித்த குரு பத சரணம்

தண்டாயுதபாணி பத சரணம்
தர்மத்தின் திருவே பத சரணம்
தாயுள்ளம் கொண்டருள் பத சரணம்
தாள் பணிந்தோர்க் கருள் குரு சரணம்

## அண்டங்கள் காக்கும் நீலகண்ட
## அனுஷநாத குரு கானம்

**(கோலாட்டப் பாடல் - மெட்டு)**



கயிலை வாஸனே கனக சபேஸனே
கார்த்திகேயனே மஹா ஸ்வாமி
கருணா ஸாகர காலடி சங்கர
காஞ்சி வாஸனே மஹா ஸ்வாமி

அத்வைத திருவே அருஉரு திருவே
ஆலடி குருவே மஹாஸ்வாமி
அண்டங்கள் காக்கும் நீல கண்டனே
ஆதுரம் தீர்த்திடும் மஹா ஸ்வாமி

கண் கண்ட தெய்வமே கலியுக வரதனே
காருண்ய குருவே மஹா ஸ்வாமி
கழல் பணிந்தோர்க்கருள் காமாக்ஷி தாஸனே
காத்தருள் தெய்வமே மஹா ஸ்வாமி

சந்திர பிறையணி சுந்தர சிவமே
சாந்த ரூபமே மஹா ஸ்வாமி
சந்திர சேகர ஸ்வாமி நாதனே
சார்வ பௌமரே மஹா ஸ்வாமி

## நாளும் காத்திடும் நால்வேத நாதன்
## அனுஷநாத குரு கானம்

**(காயத்ரி மந்திரம் - மெட்டு)**



சிவ குரு நாதா பத சரணம்
தவ குரு நாதா பத சரணம்
ஸ்வாமி நாத குருவே பத சரணம்
ஆதி சங்கர குருவே பத சரணம்

நாட்டிய நாதனே பத சரணம்
நால்வேத நாதனே பத சரணம்
நானிலம் நடந்திட்ட பத சரணம்
நாளும் காத்திடும் பத சரணம்

நான்முக பிரம்மனே பத சரணம்
நாராயணனே பத சரணம்
நாடெங்கும் நடந்திட்ட பத சரணம்
நாடிய வரமருள் பத சரணம்

நாகாபரணனே பத சரணம்
நாமகள் ரூபனே பத சரணம்
நாட்டமோ டருளும் பத சரணம்
நாடே போற்றிடும் பத சரணம்

## பதம் பணிய நிதம் அருளும்
## அனுஷநாத குரு கானம்

**(காயத்ரி மந்திர - மெட்டு)**



சங்கர குருவின் அடி பணிவோம் - ஆதி
சங்கர குருவின் தாள் பணிவோம்
சங்கர குருவின் இதம் உணர்வோம் - ஈடில்லா
சங்கர பத நிழல் அடைந்திடுவோம்

காஞ்சியில் அமர்ந்தருள் கற்பகமே
காஞ்சி காமாக்ஷியாய் அருள் அற்புதமே
காஞ்சியில் அருளிடும் சத்தியமே - திருக்
காஞ்சியின் நடமாடும் தெய்வமே

சங்கர குருவே ஸ்வாமிநாதரே -ஆதி
சங்கர குருஸ்வாமி ஆனவரே
சங்கர சந்திர சேகரரே - காஞ்சியில்
சங்கர குருவாய் அருள்வாரே

காஞ்சியில் அமர்ந்தருள் கௌமாரமே - சைவ
காஞ்சியில் வரமருள் சாக்தமே
காஞ்சியின் சிவசக்தி ஸ்வரூபமே - ஆதி
காஞ்சியில் அமர்ந்தருள் ஷண்மதமே

## ஆலடியில் அமர்ந்தருளும் ஆதிசங்கர
## அனுஷநாத குரு கானம்

மஹாபெரியவா

திருக் காஞ்சியில் அமர்ந்தருள் காருண்ய குருபரா
கைகுவித் தோர்க் கருள் காஞ்சி குருவே
மைத்ரீம் பஜத என் றருளிய குருவே
வைகாசி அனுஷத்தில் உதித்திட்ட திருவே

ஆதி சங்கரா அத்வைத சங்கரா
ஆதி ஷண்மதம் உணர்த்தியவா
ஆதி பீடமே அமர்ந்திட்ட குருவே
ஆதி காஞ்சியின் குரு சங்கரா


ஆலகாலம் உண்ட ஆனந்த தாண்டவா
ஆலடி அமர்ந்தருள் சிவ சங்கரா
ஆபத் பாந்தவா அனாத ரக்ஷகா
ஆதி காஞ்சியின் குரு சங்கரா

ஆறு முகம் கொண்டு வந்திட்ட மலரே
ஆறு நெற்றியின் அருட் சுடரே
ஆறுதல் அருள் குருஸ்வாமி நாதரே
ஆதி காஞ்சியின் குரு சங்கரா



## சந்ததமும் காத்தருளும் ஸ்வாமிநாத சங்கர அனுஷநாத குரு கானம்

**(செந்தமிழ் நாடெனும் போதினிலே - மெட்டு)**



கந்தனாய் வந்திட்ட சங்கரரே - என்றும்
காந்தமாய் ஈர்த்தருள் சங்கரரே
குந்தகம் இன்றியே காப்பவரே - ஸ்ரீ லக்ஷ்மி
காந்தனாய் காத்திடும் சங்கரரே

சந்திர சேகர சங்கரரே - என்றும்
சாந்தமாய் அமர்ந்தருள் சங்கரரே
சந்ததம் பணிந்திட சங்கரரே - மன
சாந்தியை அருள்வீர் சங்கரரே

மந்திரம் ஆயிரம் தந்தவரே - எங்கள்
முந்தை வினை தீர்க்க வந்தவரே
மாந்தரின் குரு ஆதி சங்கரரே - நெஞ்சில் வேத
மந்திரம் விதைத்திட்ட சங்கரரே

பந்த பாசம் அற்ற பரம் பொருளே - தீப்
பந்தமாய் அமர்ந்தருள் சங்கரரே
பாந்தமாய் பணிந்திட அருள்வீரே - லோக
பந்தங்கள் விடுபட அருள்வீரே

# ஆதிகாஞ்சியில் அமர்ந்தருளும் அனுஷநாத குரு கானம்

**(பிருந்தாவனமும் நந்தகுமாரனும் - மெட்டு)**

சந்திரோதயமாய் அமர்ந்தருள் குருவே - மன
சாந்தியை தந்திடும் ஜெகத் குருவே
சிந்திக்க சங்கர நாமம் தினமே - ஆத்ம
சாந்தியை தந்திடும் ஜெகத் குருவே



கந்தனின் திருவே ஸ்வாமி நாதரே
காந்தமாய் ஈர்த்தருள் ஜெகத் குருவே
கண் கண்ட தெய்வமே கலியுக தெய்வமே
காருண்ய திருவே ஜெகத் குருவே

அம்புலி வதன அத்வைத திருவே
ஆதி சங்கர ஜெகத் குருவே
அழியா லஹரிகள் அருளிய குருவே
ஆதி காஞ்சியின் ஜெகத் குருவே

தவத்திரு உருவே ஆலடி குருவே
தாவிடும் மனதை அடக்கிடும் ஜெகத்குருவே
தஞ்சமென்றடைந்திட தயை புரிந்தென்றும்
தாயாய் காத்திடும் ஜெகத் குருவே

**காஞ்சி சர்வக்ஞ பீடத்தின் 70 வது சங்கராச்சாரியாரான ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பீடாரோஹன (பட்டம் ஏற்ற 29.05.1983) நாளான 29.05.2016 இன்று குருவருளால் எழுதப்பட்ட குரு வணக்க பாடல்.**

**(சக்கனி தல்லிக்கு சாங்கு பலா - மெட்டு)**

லட்சிய குருவே சங்கரா ஹரா ஹரா - சுப
லக்ஷண குருவே சங்கரா



தண்டம் ஏந்தியே வலம் வந்திடவே
தண்டலம் தலத்தில் பிறந்தவரே
தண்டனிட்டோர்க் கருள்புரிந்திட என்றும்
கோதண்ட பாணியாய் காத்தருள்வீர்


பால பருவத்தில் ஞாலம் போற்றவே
கோல முனி உரு கொண்டவரே
ஆலடி குருவின் காலடி நிழலில்
காலடி பதித்திட வந்தவரே

ஷண்மத குருவின் சங்கர பீடத்தில்
ஷண்மதம் காத்திட வந்தவரே
ஷண்முகனா யருட் பார்வையினா லென்றும்
ஷண்மதம் உணர்த்திடும் சங்கரரே

வேத வேள்விகள் கோயில் தீபங்கள்
ஒளிர்ந்திட என்றும்  விழைபவரே
பாத பங்கஜம் பணிந்தோர்க் கருள்வீர்
பாதகம் இல்லா (மன) பக்குவேமே



**அக்ஷய திரிதியை பொன்னாளில்**
**தரணியை காக்க தண்டம் ஏந்திய**
**புன்னகை பூமுக**
**புது பால பெரியவா கானம்**



சத்ய சங்கர நித்ய சங்கர அத்வைத சங்கர ஜெகத்குரோ
திவ்ய சங்கர பவ்ய சங்கர காஞ்சி சங்கர ஜெகத்குரோ

ருத்ர சங்கர மித்ர சங்கர சாத்வீக சங்கர ஜெகத்குரோ
வேத சங்கர சாது சங்கர காஞ்சி சங்கர ஜெகத்குரோ

ஆதி சங்கர காலடி சங்கர காம கோடி சங்கர ஜெகத்குரோ
ஜோதி சங்கர ரிக்வேத சங்கர காஞ்சி சங்கர ஜெகத்குரோ

ஆதி சங்கர ஆலடி சங்கர ஆருத்ர சங்கர ஜெகத்குரோ
ஞான சங்கர தியான சங்கர காஞ்சி சங்கர ஜெகத்குரோ

ஆகாஸ சங்கர ப்ரபஞ்ச சங்கர ஆனந்த சங்கர ஜெகத்குரோ
ப்ரகாஸ சங்கர ப்ரத்யக்ஷ சங்கர காஞ்சி சங்கர ஜெகத்குரோ

சத்ய சந்திர சேகரேந்திர சரஸ்வதி குரு சங்கரா
சத்ய வழி தனில் நித்தியம் நடந்திட காஞ்சி வந்த குரு சங்கரா

சாத்வீக திருவே ஆன்மிக குருவே சங்கர பீடத்தின் சங்கரா
சத் சித் ஆனந்த ஸாகர திருவே சர்வக்ஞ பீடத்தின் சங்கரா

சங்கர விஜயீந்திரர் சந்யாஸ தீக்ஷையால் புத்துயிர் பெற்றவா சங்கரா
சங்கர பீடத்தின் சாநித்யம் காக்கவே தண்டம் ஏந்திய சங்கரா

# அஞ்சிவந்தோர்க்கு அபயம் அருளும் அனுஷநாத குரு கானம்

**(பலுக்கே பங்கார மாயனா - மெட்டு)**




மண் வந்த மாமலை ஈஸ்வரனே - நம்
மனக் குறை தீர்க்கும்
மஹாஸ்வாமி பாதம் பணிவோமே

அம்புலி அணிந்திட்ட மௌலீஸ்வரனே
அம்பிகைக் கிட பாகம் தந்த சிவனே
அம்பிகை தலத்தில் அமர்ந்தருள்பவரே
அம்பு விழியால் வினை தீர்ப்பவரே

அஞ்சிவந்தோர்க்கருள் அபயக் கரமே
அஞ்சா நெஞ்சருள் ஆதி சிவமே
அஞ்சனை மைந்தனாய் வந்திட்ட சிவமே
அஞ்ஞானம் போக்கிடும் காஞ்சி தவமே

அழகிய கந்தனாய் வந்திட்ட சிவமே
அளவிலா ஞானம் அருளும் பரமே
அழியா புகழ் உடை காமகோடி பீடமே
அனைவர்க்குமருள் நடமாடும் தெய்வமே



## ஆதி வேதம் காக்க வந்த அனுஷநாத குரு கானம்

**(பிரபோ கணபதே - மெட்டு)**



மஹா பெரியவா
மனக் கவலைகள் தீர்த்திடும் மாமலை திருவே
மஹா பெரியவா

ஆதி காஞ்சி வந்த ஆலடி சங்கரா
ஆதி காமாக்ஷி துதி சங்கரா
ஆதி காலடி சர்வக்ஞ சங்கரா
ஆதி அத்வைத குரு சங்கரா

வேதம் நான்கும் தந்த வேதபுரீஸா - தமிழ்
வேதம் தந்திட்ட கருணேஸா
வேத ஆகமங்கள் காத்திட்ட புங்கவா - பஞ்ச
வேதம் பரப்பிய பரமேஸா

ஆதி தலங்கள் பல உணர்த்திய சங்கரா
ஆதிரையானே அருணேஸா
ஆதி காஞ்சியில் அமர்ந்தருள் சங்கரா
ஆதி வினைதீர்த் தருள்ஈஸா

சங்காரனந்த கானங்கள் தொடர்ந்து வெளிவர தங்களால் இயன்ற நன்கொடைகளை நல்கி குருவருள் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ரூ.100/-** அளிப்பவர்களுக்கு இந்த வெளியீடு தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.504/-** அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் Pdf / Whatsapp-ல் அனுப்பப்படும்.

**ரூ.1008/-** அல்லது அதற்கு மேல் அளிப்பவர்களுக்கு சமீபத்திய மூன்று வெளியீடுகள் மற்றும் 250 சங்காரனந்த கானங்கள் ஆடியோ - Pen Drive மூலம் தபாலில் அனுப்பப்படும்.

**G-Pay : 99404 47 437**

நன்கொடை அளித்தவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொகை மேற்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

- தேனுபுரீஸ்வர தாசன் இல. சங்கர்

## அனுஷத்தில் உதிர்த்திட்ட ஆதிரை நாதர்
## அனுஷநாத குரு கானம்

**(அனரோ அனரோ - மெட்டு)**

அனுஷத்தில் பிறந்திட்ட அருட்குரு நாதரே
அனுக்கிரஹம் புரிந்தே ஆட்கொள்ளும் வரதரே
அணு முதல் அண்டம் காத்திடும் ஆதியே
அனுஷாம்ருதமே சங்கர ஜோதியே



அம்பிகைக்கிட பாகம் தந்திட்ட சிவமே
அம்பிகை தலம்வந்து அமர்ந்திட்ட தவமே
அம்பிகையாய் என்றும் அருள்வீர் வரமே
அம்பலத்தரசனே காமகோடி பரமே

அஞ்சேல் என்றருள் அஞ்சனை மைந்தனே
அஞ்சிவந்தோர்க் கருள் ஸ்வாமி நாதனே
அஞ்சும் எட்டும் உணர்த்திடும் குருவே
அஞ்சா நெஞ்சருள் காமகோடி திருவே

அச்சுத கேசவ மாதவ நாரணா
அச்சாணியாய் நெஞ்சில் அமர்ந்தருள் பூரணா
அச்சங்கள் தீர்த்தே காத்தருள் காரணா
அச்சமயம் அருள் காமகோடி ஆரணா

## வேண்டி நின்றோரின் வேதனை தீர்த்திடும்
## அனுஷநாத குரு கானம்

**(நாதஸ்வர ஓசையிலே - மெட்டு)**

வேண்டி நின்றோர்க் கருள் புரியும் வேதாச்சல ஈஸ்வரனே
வேண்டியதை தந்தருளும் காமகோடி சங்கரனே

ஆதி காஞ்சி தலம் வந்த ஆதி சிவ சங்கரனே
ஆதி சக்தி உமையவளின் சக்தி பீட சங்கரனே
ஆதி காஞ்சி தலம் அமர்ந்த ஆதி குரு சங்கரனே
ஆதி முக்தி தலம் அமர்ந்த ஸ்வாமி நாத சங்கரனே

ஆலங்கா டுறை சிவமே அஷ்ட புஜ திருக்கரமே
ஆலடியில் அமர்ந்தருளும் ஆனந்த தவக்கோலமே
ஆலால விஷம் உண்ட கருணாம்ருத ஸாகரமே
ஆலங்குடி மூர்த்தமே ஸ்வாமி நாத சங்கரனே

ஆறுமுக வேலவனே தண்ட பாணி தெய்வமே
ஆறு மதம் காக்க வந்த நடமாடும் தெய்வமே
ஆறாத் துயர் தீர்த்தருளும் அத்வைத தெய்வமே
ஆறுமுக ஸ்வாமிநாத குரு சங்கர தெய்வமே



## கம்பை நதிக்கரையில் அமர்ந்தருளும்
## அனுஷநாத குரு கானம்

**(பிரம்ம முராரி - மெட்டு)**



அருந்தவத் திருவே ஆலடி குருவே
ஆறு மதம் தந்த காலடி குருவே
அருஉரு திருவே சிவசக்தி திருவே
ஆதி குரு பீடத்தின் சங்கர குருவே

கம்பை நதிக் கரை காருண்ய சிவமே
காமகோடி பீடத்தின் ஆனந்த தவமே
கழல் பணிந்தோர்க்கருள் கற்பக சிவமே
காடும் மேடும் நடந்திட்ட அற்புத தவமே

சந்திர சூர்யக்னி த்ரிநேத்ர திருவே
சாந்தமாய் அமர்ந்தருள் திருக்காஞ்சி குருவே
சந்ததம் காத்திடும் சங்கரத் திருவே - மன
சாந்தியை தந்திடும் சங்கர குருவே

தரணியை காத்திட வந்திட்ட சிவமே
தானே பரமென் றுணர்த்திய தவமே
தவித்திடும் மனதிற் கருளிடும் சிவமே
தாயாய் தந்தையாய் காத்திடும் தவமே

# கல்லாலின் கீழமர்ந்தருளும் கருணாமூர்த்தி
# அனுஷநாத குரு கானம்

**(பூமியில் மானிட ஜென்மம் எடுத்துமோர் - மெட்டு)**



கண் கண்ட தெய்வமே கலியுக தெய்வமே
காஞ்சியில் அமர்ந்தருள் காருண்ய ரூபமே
கண்ணப்பர்க் கருளிய காளத்தி தெய்வமே
காண வேண்டும் தரிசனம் நெஞ்சினில் தினமே

கல்லாலின் கீழமர் சாம்ப சதா சிவமே
காலத்தில் காத்தருள் காஞ்சியின் கற்பகமே
கல்லதனை தெப்பமாய் மாற்றிய சிவமே
காலமெல்லாம் வேண்டும் நின் கருணை வெள்ளமே

கற்பனைக்கும் எட்டாத பேரெழில் ஷண்முகமே
காருண்ய பார்வையால் அருளும் பொன்முகமே
கந்தன் முன் பணிந்திட்ட பெருஞ்சோதி ப்ரணவமே
கந்த ஸ்வாமி நாதரே களைவீர் எம் ஆணவமே

கருவறை கொண்டருள் கயிலாய அற்புதமே
காரிருள் போக்கிடும் காஞ்சியின் அற்புதமே
கழல் பணிந்தோர்க்கருள் காருண்ய பொற்பதமே
காஞ்சியில் வரம் அருளும் காமகோடி பொற்பதமே

## கலவையில் உதித்திட்ட காருண்யகுரு
## அனுஷநாத குரு கானம்

**(நாதர் முடி மேல் இருக்கும் - மெட்டு)**



காலடியில் பிறந்தவரே ஆதி சங்கரா - ஞானக்
கலவையின் பால குரு மஹா பெரியவா
கால கால சங்கரா வேத சங்கரா - மனம்
கலங்கி நின்றோர்க் கருளும் மஹா பெரியவா

பால பருவ சன்னியாசி ஆதி சங்கரா - மனோ
பலம் கொண்ட குரு மஹா பெரியவா
பாலமாய் அக்கரை சேர்க்கும் ஞான சங்கரா - தபோ
பலம் பெற அருள்வீர் மஹா பெரியவா

ஆலடியில் அமர்ந்தருளும் ஆதி சங்கரா - திவ்ய
அலங்கை ஏற்றருளும் மஹா பெரியவா
ஆலாலம் உண்ட அமிர்தேஸ்வரா - பக்தர்
அல்லல்கள் தீர்த்தருளும் மஹா பெரியவா

(அலங்கை - துளசி மாலை)

மாலயனும் காணாத ஜோதி சங்கரா - மும்
மலங்கள் போக்கிடும் காஞ்சி சங்கரா
மாலயன் தானுவே மோக்ஷ சங்கரா - நித்தம் நின்
மலரடி பணிந்திடவே அருள் சங்கரா

## உள்ளத்தில் உற்சாகம் அருளும்
## அனுஷநாத குரு கானம்

(தேடுகின்ற கண்களுக்குள் ஓடி வரும் ஸ்வாமி - மெட்டு)



வாடுகின்ற கண்களுக்குள் ஒளியருளும் தெய்வம்
நாடுகின்ற நெஞ்சினிலே நின்றருளும் தெய்வம்
மஹாபெரியவா காஞ்சி மஹா பெரியவா

அல்லல் அறுத் தருள் புரியும் விக்னேஸ்வரரே - மன
ஆதுரம் தீர்த்தருளும் ஸ்வாமிநாதரே
இன்னல்கள் களைந்தருளும் பூமி நாதரே - நமை
ஈர்த்தாட் கொண் டருள்புரியும் வேத நாதரே

உள்ளமதில் கோயில் கொண்டு அமர்ந்தருள்வாரே - நம்
ஊழ் வினைகள் நித்தமும் களைந்தருள்வாரே
எண்ணமதில் உன்னதமே விதைத்தருள்வாரே - வாழ்வில்
ஏற்றங்கள் மாற்றங்கள் தினமருள்வாரே

ஐம்புலனும் அடக்கிடவே அருள்புரிவாரே - மீளா
ஒருவழிப் பாதையில் சேர்த்தருள்வாரே
ஓயாதென்றும் திருவருளால் கவர்ந்தருள்வாரே - மன
ஔவியங்கள் போக்கியே கரை சேர்ப்பாரே



## ஐம்புலன்களை அடக்கிட அருளும்
## அனுஷநாத குரு கானம்

**(சின்னஞ்சிறு குழந்தை ஒன்று கனவில் வந்தது - மெட்டு)**

கண் கண்ட தெய்வமே காஞ்சி சங்கரா - ஞானக்
கண் திறந்தே அருள் குருவே மஹா பெரியவா
கண் மூன்று கொண்டதிருக் கயிலை சங்கரா - இரு
கண்களுக்குள் உறைந்தருள்வீர் மஹா பெரியவா

செவி பெற்ற பலன் பெற்றோம் காஞ்சி சங்கரா - இரு
செவியால் உன் கதை கேட்டோம் மஹா பெரியவா
செவிக்குணவானதுன்தன் மஹிமை சங்கரா - திருச்
செவியால் உன்புகழ் கேட்டோம் மஹா பெரியவா



வாய் பெற்ற பலன் பெற்றோம் காஞ்சி சங்கரா - சிறு
வாய்மலர்ந்துன் நாமம் சொன்னோம் மஹா பெரியவா
வாயாற பாடி நின்றோம் காஞ்சி சங்கரா - திரு
வாய் மலர்ந்தே அருள்புரிவீர் மஹா பெரியவா

மெய் மறந்து நின்றோமே காஞ்சி சங்கரா - ஆதி
மெய் ஞானம் உணர்த்திடுவீர் மஹா பெரியவா
மெய் வழியில் சேர்த்தருள்வீர் காஞ்சி சங்கரா - வான
மெய்திடவே வரமருள்வீர் மஹா பெரியவா

மூச்சடங்கும் முன் உணர்ந்தோம் காஞ்சி சங்கரா - உயிர்
மூச்சுந்தன் நினைவென்றே மஹா பெரியவா
மூச்சுக்காற்றாய் உள்வந்தருள்வீர் காஞ்சி சங்கரா - பெரு
மூச்சோடுமை சேர்ந்திடவே மஹா பெரியவா

## கண் கண்ட கலியுக தெய்வம்

## அனுஷநாத குரு கானம்

அனுஷத்தில் பிறந்தவரே - நொடியில்
அனுக்கிரஹம் புரிபவரே
நிமிஷத்தில் நோய் தீர்க்கும் நமசிவாயரே
நடமாடும் தெய்வமே - நெஞ்சில்



வானம் பூமி காக்கும் ஆனந்த கூத்தனே
தேனம்பாக்கம் தலத்தின் தவசீலரே
காணவே காஞ்சி காமாக்ஷி கோலமே
கணபதிக் காணை யிட்டுக் கண்டீரே

கண் மூன்று கொண்டருள் காளத்தி நாதனே - முக்
கண் தேங்காயை படைத்தீர் பிள்ளைக் கன்றே
கண் காண காமாக்ஷி திருவலம் காஞ்சியில் - முக்
கண் தேங்காயை படைத்தீர் பிள்ளைக் கின்றே

ஆனை முகத்தை தந்த கேதார நாதனே - உன்னை
ஆணையிட்டு மறித்தானே கணபதி அன்றே
ஆனை முகத்தான் இன்று கோபுரம் முன் நின்றே
ஆணையிட்டு மறித்தானே தாயை இன்றே

கண் கண்ட தெய்வமே கலியுக தெய்வமே - ஞானக்
கண் அருளும் காமகோடி தெய்வமே
கண்கள் மூடி ஆடல் புரிந்திட்ட தேவியை - இரு
கண்களால் கண்டீரே காஞ்சியிலே

# அஞ்ஞானம் போக்கிடும் மெய்ஞான சற்குரு
# அனுஷநாத குரு கானம்

**(புனரபி ஜனனம் - மெட்டு)**

அத்வைத சத்தியம் உணர்த்திய திருவே
அத்யந்த சக்தியே திருக்காஞ்சி குருவே
அத்ரி அனுசுயா போற்றிய திருவே
அத்யாபகர் துயர் தீர்த்திட்ட குருவே



அஞ்ஞானம் போக்கிட வந்திட்ட திருவே
அஞ்சி வந்தோர்க் கபயம் தந்திட்ட குருவே
அஞ்சேல் என்றருளும் ஷண்முகத் திருவே
அஞ்சோடெட்டருமை உணர்த்திய குருவே

அம்பலத் தரசனாய் நின்றருள் திருவே
அம்புலி அரசனை துதித்திட்ட குருவே
அம்பிகை சன்னதியில் கரைந்திட்ட திருவே
அம்புலி முகத்தோடே அமர்ந்தருள் குருவே

அச்சுதன் அயனும் போற்றிய திருவே
அச்சோ பத்துணர்த்தும் ஆலடி குருவே
அச்சிறு வயதினில் குருவான திருவே
அச்சமயம் எம்மை காத்திடும் குருவே

# வினைகள் தீர்த்திடும் விஸ்வநாத
# அனுஷநாத குரு கானம்

**(ராமச் சந்திராய - மெட்டு)**



அனுஷ நாத ஸ்வாமிநாத காஞ்சி சங்கரா
வேத நாத வைத்தியநாத காஞ்சி சங்கரா
ஜெகந்நாத ஜோதி நாத காஞ்சி சங்கரா
விஸ்வ நாத ஸ்வாமிநாத காஞ்சி சங்கரா

ஜோதீஸ்வர ஜெகதீஸ்வர காஞ்சி சங்கரா
பரமேஸ்வர பிரகதீஸ்வர காஞ்சி சங்கரா
தியானேஸ்வர சைலேஸ்வர காஞ்சி சங்கரா - சந்திர
மௌலீஸ்வர மகுடேஸ்வர காஞ்சி சங்கரா

கமலேஸ்வர காமேஸ்வர காஞ்சி சங்கரா
விமலேஸ்வர யக்ஞேஸ்வர காஞ்சி சங்கரா
குரு ஈஸ்வர கோடீஸ்வர காஞ்சி சங்கரா - சந்திர
மௌலீஸ்வர மகுடேஸ்வர காஞ்சி சங்கரா

அமரேஸ்வர குமரேஸ்வர காஞ்சி சங்கரா
அருணேஸ்வர கருணேஸ்வர காஞ்சி சங்கரா
அகிலேஸ்வர தரணீஸ்வர காஞ்சி சங்கரா - சந்திர
மௌலீஸ்வர மகுடேஸ்வர காஞ்சி சங்கரா

## சங்கரானந்தம்

இது வரை சற்றேறக்குறைய 1000 பாடல்களுக்கு மேல் எழுத வைத்துள்ள காஞ்சி மஹாஸ்வாமி, 23 சங்கரானந்த தொகுப்புகளை மஹா பெரியவாளின் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக 2,00,000 பிரதிகளுக்கு மேல் வழங்கி அடியேனை அகமகிழச் செய்துள்ளார். மஹா பெரியவாளின் அத்யந்த பக்தர்களின் பொருளுதவியால் இப்பெரும் புண்ணிய குரு கைங்கர்யம் அமோகமாக நடைபெற்றுக்கொண்டுள்ளது. அடுத்து சங்கரானந்தம் - தொகுப்பு 25 வெளிவர தங்களால் இயன்ற பொருளுதவி செய்து குரு கைங்கர்யத்தில் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊர் கூடி தேர் இழுத்தல் போல
பலர் கூடி மஹாபெரியவாளின் மஹிமைகளை போற்றும் சங்கரானந்த தேரை
மலர் தூவி வரவேற்று அனைவரது இல்லத்திலும் சேர்த்து
பலர் மனமகிழ்ந்து அகம்குளிரச் செய்வோம் வாரீர். . .

என்றென்றும் குரு கைங்கர்யத்தில் திளைத்து , திருப்பாதம் பணிந்து

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர், 99404 47 437.**

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
# ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்
# அஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
ஓம் ஸன்யாஸாஸ்ரம சிகராய நம:
ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
ஓம் கருணாஸாகராய நம:
ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
ஓம் பக்த பரிபாலக ஸ்ரேஷ்டாய நம:
ஓம் தர்ம பரிபாலகாய நம:
ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்யஸ்வரூபாய நம:
ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
ஓம் ஸ்வதர்ம பரிபோஷகாய நம:
ஓம் சாதுர் வர்ண்ய சம்ரக்ஷகாய நம:
ஓம் லோக ரக்ஷண ஸங்கல்பாய நம:
ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
ஓம் தர்ம ரக்ஷண ஸந்துஷ்டாய நம:
ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:
ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
ஓம் ருத்ராக்ஷ கிரீட தாரிணே நம:
ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
ஓம் மனஸ் சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:





ஓம் அபய ஹஸ்தாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் யக்ஞ புருஷாய நம:
ஓம் யக்ஞாநுஷ்டான ருசிப்ரதாய நம:
ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
ஓம் யக்ஞ பலதாய நம:
ஓம் யக்ஞ ப்ரியாய நம:
ஓம் உபமான ரஹிதாய நம:
ஓம் ஸ்படிக துளஸீ ருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தயவஸ்தாதீதாய நம:
ஓம் கோடி ஸூர்யதுல்ய தேஜோமய சரீராய நம:
ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
ஓம் அச்வகஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
ஓம் கனகாபிஷிக்தாய நம:
ஓம் ஸ்வர்ண வில்வதள பூஜிதாய நம:
ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
ஓம் த்வாதச லிங்க ஸ்தாபகாய நம:
ஓம் கான ரஸஞ்ஞாய நம:
ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
ஓம் ஸகல கலா ஸித்திதாய நம:
ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
ஓம் அஷ்ட ஸித்திப்ரதாயகாய நம:
ஓம் ஸ்ரீ சாரதா மட ஸுஸ்திதாய நம:
ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:
ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
ஓம் ஸ்ரவணானந்தகர கீர்த்யே நம:
ஓம் தர்சனானந்தாய நம:
ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:




ஓம் சைவ வைஷ்ணவாதி மான்யாய நம:
ஓம் சங்கராசார்யாய நம:
ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
ஓம் ராமகதா ரஸிகாய நம:
ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகல கலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
ஓம் அவித்யா நாசகாய நம:
ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
ஓம் லிங்கஸ்வரூபாய நம:
ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
ஓம் காலட்யாம் சங்கர கீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:
ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ சைல சிகரவாஸாய நம:
ஓம் டமருகநாத விநோதனாய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் துர்மதநாசகாய நம:
ஓம் ஆபிசாரிகதோஷஹர்த்ரே நம:
ஓம் மிதாஹாராய நம:
ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
ஓம் ஸ்ரீ சக்ரார்ச்சன தத்பராய நம:
ஓம் தாஸானுக்ரஹ காரகாய நம:
ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
ஓம் ஸர்வலோக க்யாத சீலாய நம:
ஓம் வேங்கடேஸ்வர சரணபத்மஷ்டபதாய நம:
ஓம் ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திமௌலீஸ்வர பூஜாப்ரியாய நம:



இதி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஜெகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி அஷ்டோத்திர சத நாமாவளி சம்பூர்ணம்.







பாதக மலங்களை போக்கும்

பாத கமலங்களை பணிவோம்

# சங்கரானந்தம்-24

## 10.06.2025





